
NOOLAHAM FOUNDATION
நூலக நிறுவனம்

# சுதுமலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்








www.noolaham.foundation

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | சுதுமலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | சுதுமலை, யாழ்ப்பாணம் |
| செயற்றிட்ட காலம் | 12 மாதங்கள் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| பாதீடு (Budget) | 2,582,200 இலங்கை ரூபாய் |

நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.


செயற்றிட்ட சுருக்கம்

ஊர் ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வீயூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆய்வனுபவங்களின் அடிப்படையில், ஊர் தொடர்பில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள், தரவுகள் பற்றிய ஒரு சட்டகம் (வார்ப்புரு) உருவாக்கப்பட்டு. தகவல் வளங்கள், தரவுகள், ஒளிப்படங்கள், காணொளிகள், வாய்மொழி வரலாறுகள் முதலானவற்றை சேகரிக்கும் களப் பணிகள் ஊடாக ஒர் ஊரை ஆவணப்படுத்தல் தொடர்பான முறைமை உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வளங்களை நீண்ட காலம் பயன்படக் கூடிய வகையில் பாதுகாத்துப் பகிர்வதற்கான ஆவணப்படுத்தல் முறைகளையும் நாம் உருவாக்கி கிழக்கிலும் வடக்கிலும் சில ஊர்களை தேர்தெடுத்து முன்மாதிரிச் செயற்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ், சைவம், கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றை கட்டிக்காப்பதில் முக்கிய பங்குவகிக்கும் பல ஊர்களின் வரிசையில் ஒன்றாக திகழும் சுதுமலை ஊரின் சிறப்பம்சங்களை ஆவணப்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாகும்

அறிமுகமும் பின்புலமும்




சுதுமலை என்னும் ஊரானது யாழ் நகரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இதன் எல்லைகளாக உடுவில், இணுவில், மானிப்பாய், தாவடி ஆகிய ஊர்கள் அமைந்துள்ளன. இந்த ஊரானது சுதுமலை வடக்கு மற்றும் சுதுமலை தெற்கு என இரண்டு கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சுதுமலையானது சைவம் வளர்க்கும் பல கோயில்களையும், அக்கோயில்கள் தொடர்பான சடங்குகள், பூஜைகள், தொன்மை வரலாறுகள், சமய நம்பிக்கைகள் போன்றவற்றினாலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. சுதுமலையை பிறப்பிடமாகக் கொண்ட பலரும் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் மற்றும் சைவம் தழைத்தோங்கப் பங்களிப்பாற்றியுள்ளனர். அவ்வகையான சிறப்பு மிக்க ஊரான சுதுமலை தொடர்பான அரிய மற்றும் தொன்மையான தகவல்களை சேகரித்து தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் அவற்றை ஆவணப்படுத்தி பாதுகாப்பது அத்தியாவசியமானதொன்றாகும்

செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

சுதுமலை ஊரானது சைவத்தை வளர்க்கும் பல இந்து சமயக் கோவில்களை தன்னகத்தே கொண்டுள்ளது. சுதுமலையின் புகழ் பாடும் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோவில், சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம், சுதுமலை மாணிக்கப்பிள்ளையார் கோவில், சுதுமலை சிவன் கோவில், சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோவில், சுதுமலை பிட்டி வைரவர் போன்ற கோவில்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. சுதுமலை கோவில்களில் நிகழும் கோமாதா பூஜைகள், கந்தசஷ்டி பூஜைகள், திருக்கார்த்திகை விளக்கீடு, மகா தீப ஜோதி தரிசனம், அம்மன் உட்சவம் போன்ற பல நிகழ்வுகள் சிறப்பம்சம் வாய்ந்தவை இவ்வாறான தொன்மை வாய்ந்த கோவில்களின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தினை அழிவடையாது கட்டிக்காப்பாற்றும் வகையில் அவற்றை ஆவணப்படுத்துவது அவசியமாகும்.

சுதுமலையில் சிந்மய பாரதி வித்தியாலயம் மற்றும் இரு அரசினர் பாடசாலைகளையும் அமைந்துள்ளன. இதில் சிந்மய பாரதி வித்தியாலயம் ஆனது 1882 ஆம் ஆண்டு, சிந்நய பிள்ளை என்னும் வள்ளலினால் சைவப் பிள்ளைகளுக்காக கட்டப்பட்டதாகும். அவ்வாறான தொன்மை மிக்க பாடசாலையின் வரலாற்றினையும் ஊர் மக்களுக்காக இப்பாடசாலை ஆற்றிய சேவைகளையும் சேகரித்து ஆவணப்படுத்துவது அவசியமாகும்.

இவ்வூரில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளபப்ட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஊரில் எழில் கொஞ்சும் வயல்களும் குளங்களும் காணப்படுகின்றமை இந்த ஊருக்கு அழகையும் செழிப்பையும் வழங்குகின்றது.

இவ்வாறான அறிந்தும் அறியாமலும் காணப்படும் சுதுமலை ஊர் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்துவதன் முக்கியத்தை நூலக நிறுவனம் அடையாளம் காண்பதோடு அவற்றை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் ஆவணப்படுத்துவதன் அவசியத்தையும் உணர்கின்றது.

## இலக்குகளும் நோக்கங்களும்

சுதுமலை ஊர் ஆவணப்படுத்தல் திட்டமானது பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களைக் கொண்டுள்ளது

.

ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆவணப்படுத்தல் **(documentation)**, ஆவணகப்படுத்தல் **(archiving)**, அணுக்கப்படுத்தல் **(providing open access)**

1. வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி சுதுமலை ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல்
2. ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு ஆவணப்படுத்தல்.
3. ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல்.

## செயற்பாடுகள்

- செயற்திட்ட வடிவமைப்பு (Project Design)

  பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்களை மீளாய்ந்து, செயற் திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைவாக துல்லியமான செயற் திட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம் .

- சந்திப்புக்கள்/நிகழ்வுகள்/பயிற்சிப் பட்டறைகள்

  சுதுமலை வாழ் மக்கள் ஊடான சந்திப்புக்கள், நிகழ்வுகள் ஊடாகவே சுதுமலை தொடர்பான ஆவணப்படுத்தலை சாத்தியபடுத்தலாம். மேலும், சுதுமலை மக்களை அவர்கள் தொடர்பான ஆவணப்படுத்தலில் ஈடுபட வைப்பதும், அதற்கான ஆளுமையை கூட்டுவதும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடு தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகாப்பும் (Collection Development & Digital Preservation)

சுதுமலை மக்களால் வெளியிடப்பட்ட சுதுமலை தொடர்பான தகவல் வளங்களை கண்டறிந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல். குறிப்பாக எத்தனை வளங்கள் இவ்வாறு கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணித்தல்

- களப் பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)

  களப் பணிகள் ஊடாக உருவாக்கப்படும் வளங்கள் process செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வெளியிடப்படும்.
    - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
    - ஒளிப்படங்கள் எடுத்தல்
    - காணொளிப் படப் பிடிப்பு
    - வாய்மொழி வரலாறுகள்

- தரவுத் தொகுப்புகள் (Data Sets)

  மேற்குறிப்பிடப்பட்ட secondary மற்றும் primary தரவுச் சேகரிப்புக்களின் ஊடாகப் பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக (structured data) ஆக மாற்றித் தொகுத்தல்.
    - புள்ளிவிபரங்கள் (மக்கள் தொகையியல், கல்வி, நலம், பொருளாதாரம்)
    - இடங்கள்
    - இயற்கை வளங்கள்
    - தொல்லியல் களங்கள்
    - நபர்கள்
    - நிறுவனங்கள்

விளைவுகள்

| இலக்கு | நோக்கங்கள் | செயற்பாடுகள் | விளைவுகள் |
|---|---|---|---|
| ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆவணப்படுத்தல் **(documentation),** | ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு ஆவணப்படுத்தல். | சுதுமலை வாழ் மக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதோடு அங்கு நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றி தகவல்களை சேகரித்தல் | சுதுமலை ஊர் தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட விடயங்களை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் பயன்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| ஆவணகப்படுத்தல் **(archiving),** அணுக்கப்படுத்தல் **(providing open access)** | வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி சுதுமலை ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல் | சுதுமலையின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், அமைப்புக்கள், நிறுவனங்கள், வளங்கள், நபர்களை அடையாளப்படுத்தி அவர்களிடம் காணப்படும் ஆவணங்கள் பெறுவதோடு பாரம்பரிய விடயங்களை பதிவுசெய்தல் | |
| | ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல் | சுதுமலையில் வாழ்கின்ற பல்வேறு வகைப்பட்ட மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தி ஆவணப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொள்ளுதல் | |

கால அட்டவணை

| | மாதங்கள் (2022-2023) | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாடுகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| முன்மொழிவு மற்றும் ஆரம்பகட்ட வேலைகள் | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | |
| செயற்றிட்டத்திற்கான மனித வளங்களை பெறுதல் | | | | | | ■ | | | | | | | | | | | | |
| செயற்றிட்டத்தினை ஆரம்பித்தல் | | | | | | ■ | | | | | | | | | | | | |
| ஆய்வு மேற்கொள்ளுதல் | | | | | | ■ | | | | | | | | | | | | |
| ஆவணங்களை சேகரித்தலும் ஆவணப்படுத்தலும் | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| வாய்மொழி வரலாற்றுச் சந்திப்புக்கள் | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| வாய்மொழி வரலாறுகளை பெறுதலும் வலைத்தளத்தில் பதிவேற்றுதலும் | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |

எதிர்பார்க்கப்படும் பாதீடு
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- அனுபவம் மிக்க மற்றும் தொடர்ந்தும் நூலகத்துடன் இணைந்து பணியாற்றத்தக்க கள ஆய்வாளரை அடையாளம் காணுதல் சவாலாக அமையலாம். நீண்ட கால பணியாளர் இருக்கையை உறுதி செய்யும் வகையிலும் அவரின் கல்வி தகைமை கள அனுபவத்தின் அடிப்படையிலும் அவருக்கான சலுகைகள் மறுபரிசீலனை செய்ய ஆலோசிக்கலாம்

- சுதுமலையில் நீண்ட காலம் வாழ்ந்த நபர்கள் பல்வேறு இடங்களுக்கும் புலம்பெயர்ந்திருக்கலாம் என்பதனால் அவர்களை அடையாளம் காண்பது சவாலாக இருக்கலாம்